செய்தி வெளியீடு எண்:496 நாள்:24.10.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதா கிருஷ்ணன் அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதிகளில் 83 குடும்பங்களுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (24/10/2016 ) நடை பெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் பழுதடைந்த 3500 அடுக்குமாடி குடியிருப்புகள் இடித்து கட்டப்படும் என உத்தரவிட்டதைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி கோட்டம் 123ல் மைலாப்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள பல்லாக்கு மான்யம் திட்டப்பகுதியில் பழுதடைந்த குடியிருப்புகள் இடித்து கட்டப்பட்டன. அங்கு வசித்து வந்த 48 குடும்பங்களுக்கு புதிய குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதா கிருஷ்ணன் அவர்கள் வழங்கினார்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம் கோட்டம் 161, மண்டலம் 12ல் பரங்கிமலை இரயில் நிலையம் அருகிலுள்ள பாலத்தின் கீழ் சுமார் 35ற்கும் மேற்ப்பட்ட குடும்பத்தினர் டெண்ட் அமைத்து குடியிருந்து வந்தனர். தங்களுக்கு நிரந்தர குடியிருப்பு ஒதுக்கீடு செய்து தர வேண்டி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** தனிப்பிரிவில் மனு அளித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் நாவலூர் திட்டப்பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் 35 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது அதற்கான ஆணைகளையும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதா கிருஷ்ணன் அவர்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு செயலாளர், திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மை செயலாளர்/ மேலாண்மை இயக்குநர், திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ. ப., அவர்கள், வாரிய தலைமை பொறியாளர் திரு கோ.இராஜீ அவர்கள், வாரிய செயலாளர் திருமதி.கா.பொற்கொடி அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.